## மயிலாடுதுறை புறவழிச் சாலைத் திட்டத்தை விரைவுபடுத்துக!

# பூம்புகார் கலைகூட மேம்பாட்டினை தீவிரப்படுத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் பூம்புகார் - நிவேதா எம்.முருகன் வேண்டுகோள்!



சென்னை, ஜுலை 3-
பேரவையில் பூம்புகார் நிவேதா எம். முருகன் பேசியதாவது:

தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களையும், வணங்குகிறேன். இந்தியாவிலேயே தமிழ் நாட்டை முன்னேற்ற மாநிலமாக உயர்த்திய சிற்பி தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக பல முக்கியத் திட்டங்களைத் தந்து 90 சதவிகிதம் நடைமுறைப்படுத்தி, உலகம் இருக்கும் வரை, தமிழ் இருக்கும் வரை, யாரும் மறக்க முடியாத நூற்றாண்டைக்கண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். இந்தியாவிலுள்ள தலைவர்கள் அனைவரையும் தமிழ் நாட்டை திரும்பிப் பார்க்கும் வகையில் எடுத்துக்காட்டாக விளங்கும் தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, குறிப்பாக நடந்து முடிந்த 2019, 2021, 2022 ஆகிய தேர்தல்களிலும், தற்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளை வெற்றி பெற்ற இந்தக் கழகத்தின் தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். சாதாரண மனிதருக்கெல்லாம், சாதாரண மனிதராகவும், அன்போடும், பாசத்தோடும், கழகத் தோழர்களையும், இளைஞர்களைத் தன்வசப்படுத்தி தொடர்ந்து தொட்ட அனைத்திலும் வெற்றிகளைக் குவித்து வரும் கழகத்தின் அடுத்த தலைமுறை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். அவை முன்னவர் அவர்களையும் வணங்கி, மூத்த அமைச்சர் பெருமக்களையும்,

எனது பொறுப்பு அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களையும் வணங்கி, அரசு கொறடா அவர்களையும், சக சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி, என்னை இந்த அவைக்கு அனுப்பிய பூம்புகார் தொகுதி சட்டமன்ற மக்களுக்கும் நன்றிகூறி, மயிலாடுதுறை மாவட்ட கழக தோழர்களுக்கும் மற்றும் இந்தியா கூட்டணியைச் சேர்ந்த அனைத்துக் கட்சி நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக தமிழறிஞர் சீகன் பால்கு அவர்களுக்கு சிலையுடன்கூடிய அரங்கம் அமைத்துத்தர உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து என் உரையைத் துவங்குகிறேன்.

நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு போக்குவரத்து ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆரம்ப காலத்திலிருந்து தனியார் போக்குவரத்து துவங்கி, முதன்முறையாக தமிழ்நாட்டு மக்களுக்கு போக்குவரத்துக் கழகத்தைத் துவக்கி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் தொடர்ந்து மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணம் ஏற்பாடு செய்ததும், இன்று பெண்களுக்கு கட்டணமில்லா விடியல் பயணம் செய்வதற்கும் வாய்ப்பளித்தது திராவிட மாடல் அரசு. இன்று போக்குவரத்துத் துறையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முடிவெடுக்கிற அரசாக உள்ளது. மேலும், பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளாக இயக்க ஏற்பாடு செய்தது நமது அரசு.

### தமிழ்நாட்டில் தரமான சாலைகள்

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை ஒப்பிடும் போது, குறிப்பாக, தமிழ் நாட்டில் தரமான சாலை வசதி, அதிகமாக பொதுப் போக்குவரத்து, குறைவான கட்டணம், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கும் பேருந்து வசதி என இத்துறை செயல்பட்டு வருகிறது. நமது அண்டை மாநிலங்களான ஆந்திரா, தெலுங்கானாவை ஒப்பிடும்போது, நமது சாதாரண பேருந்துக் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளது. அதிகரித்துவரும் செலவுகள் மற்றும் நிதிப் பற்றாக்குறை இருந்தபோதிலும் மக்களின் மேல் அதிக சுமையைச் சுமத்தாமல் நமது திராவிட மாடல் அரசு டிக்கெட் விலையை ஏற்றாமல் உள்ளது. இன்றைய காலகட்டத்தில் மொத்தம் 17,662 கிராமங்களில் 17,322 கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளதைப் பார்த்தால், நமது அரசு எத்தனை செயல்பாடுகளைச் செய்துள்ளது என்பதை எடுத்துக்காட்டும்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த அரசுப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,266. தினந்தோறும் 79 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்தை பயணிக்கும் பேருந்துகள் ஒரு இலட்சத்து 79 கோடி. 1.76 கோடி பயணிகளுக்குத் தனது சேவைகளை வழங்கி வருகிறது. சுய தொழில் தொடங்கி முன்னேறத் துடிக்கும் வேலையில்லா இளைஞர்களைக் கருத்தில் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சுமை பெட்டி திட்டம் சிறப்பான திட்டம். பல்வேறு இளைஞர்கள் சுய தொழில் பெற்றிட இத்திட்டம் பெரும் உதவியாக இருக்கும். உற்பத்திப் பொருள்களை எளிதில் கொண்டு செல்லும் இந்தத் திட்டம் பாராட்டுக்குரியது. வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நமது மாநிலத்தின் அண்டை மாநிலமான திருப்பதி மற்றும் பெங்களூரு போன்ற நகரங்களுக்குக் கூடுதலாக படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன பேருந்துகளை இயக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் கழகத்தின் சீரிய முயற்சியினால் சென்னைப் போக்குவரத்துச் செயலி, பேருந்துச் செயலி, CHENNAI BUS APP என்ற தகவல் கைப்பேசி செயலி பயன்பாட்டிற்குப் பெரும் உதவியாக உள்ளது. இதன்மூலம் பயண நேரம் பேருந்துகளின் நிகழ்விடம் மற்றும் தேவையற்ற காத்திருப்பு தவிர்க்கப்படுகிறது. இதனை ஏனைய நகரங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்து ஊழியர்களின் மன அழுத்தங்களைக் குறைக்கும் வகையில் புத்தாக்கப் பயிற்சி கூடுதலாக நடத்தப்பட வேண்டுமென்பதை வேண்டுகோளாக வைக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் குக்கிராமங்களிலுள்ள மக்களை நகரங்களுக்கு அழைத்துச் செல்ல மினி பேருந்துகள் உருவாக்கப்பட்டது. இப்போது வருமானக் குறைபாடால் இதனை இயக்க இயலாத நிலை உள்ளது. மீண்டும் புதிய மினி பேருந்து துவக்கினால் கூடுதலாக கிலோ மீட்டர் தூரம் இயக்குவதற்கு தூர நீட்டிப்பு வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

### போக்குவரத்து குறித்து விழிப்புணர்வு

பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே பொது போக்குவரத்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு முன் வர வேண்டும். அதிகரித்துவரும் காற்று மாசு, வாகன நெரிசல், பூமி வெப்பமடைதல் போன்ற காரணிகளை எடுத்துரைத்து எதிர்கால தலைமுறையினருக்கு போதிய கல்வியறிவு கிடைத்திட அரசு ஆவன செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மாறிவரும் காலசூழ்நிலைக்கேற்றவாறு மாற்று எரிபொருளில் இயங்கக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்து சேவை வழங்கிட நமது கழக அரசு முன்வந்துள்ளதை பாராட்டுகிறேன்.

எனது தொகுதியிலுள்ள பொறையார் பேருந்து வசதிகளை உருவாக்கிய சக்தி விலாஸ் இயக்கப்பட்ட ஊர். அதனடிப்படையில் சோழன் போக்குவரத்துக் கழகம் அதனையொட்டி DEPOT ஆக உருவாக்கப்பட்டது. மட்டுமல்லாமல் பேருந்து கூண்டு கட்டும் தளமாக தரமுயர்த்தப்பட்டது என்பது பெருமைக்குரியது. கடந்த கால அரசு மேற்படி வரலாற்றுப் பெருமை மிக்க பொறையார் DEPOT கூண்டு கட்டும் செயல்பாடுகளை நிறுத்திவிட்டது. மீண்டும் பொறையார் DEPOT வை மேம்படுத்தி அரசு கூண்டு கட்டும் நிலையமாக உருவாக்கிட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் நலனுக்காக கழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நமது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பதவியேற்றபின் தமிழகம் முழுவதும் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளை ஆய்வு செய்து, பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மாணவ. மாணவிகளுக்கு செய்து பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

அதனடிப்படையில், அவரின் பரிந்துரையில் ஆதி திராவிடர் பள்ளி விடுதி மாணவ மாணவியர்களின் உணவுப்படி 1,000 ரூபாயிலிருந்து 1,400 ரூபாயாக உயர்த்தியும், ஆதி திராவிடர் கல்லூரி விடுதி மாணவ மாணவியர்களுக்கு 1,100 ரூபாயிலிருந்து 1,500 ஆக உயர்த்தி வழங்கியதற்கு மாணவர்கள். . .

தொகுதி கோரிக்கைகள்

மயிலாடுதுறை மாவட்டத்தில், சீர்காழி பகுதியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டி மையம் அமைக்க அரசு முன்வர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மாணவ மாணவியர் தங்கும் விடுதிகளில் மெத்தையுடன்கூடிய தாழ்தள கட்டில் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.


மயிலாடுதுறையில் ஆதி திராவிடர் நலத் துறை அலுவலகத்தை மீண்டும் துவங்க வேண்டுகிறேன். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் சார்பாக மயிலாடுதுறை மாவட்டத்தில் இயங்கும் கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கு கூடுதல் விடுதிகள் கட்டப்பட வேண்டும்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ஆயத்த ஆடை தொழிலை உருவாக்க வேண்டுகிறேன். குத்தாலம் ஒன்றியம், கங்கநாதபுரம் ஊராட்சியில் 10 ஏக்கர் இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்திட கேட்டுக்கொள்கிறேன். சங்கரன்பந்தலில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தவும், புதிய காவல் நிலையம் அமைக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

பூம்புகார் பிரசித்தி பெற்ற கலைக்கூட மேம்பாட்டிற்கு முதற்கட்ட பணிகள் நிறைவுற்றுள்ளன. அடுத்தகட்ட திட்டச் செயல்பாட்டை செயல்படுத்திட வேண்டுமென்று சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், எனது நீண்ட கால கோரிக்கையான தரங்கம்பாடிஆடுதுறை சாலையினை அகலப்படுத்தி, நேர்படுத்திட திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிலம் கையகப்படுத்தி பணி துவங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மயிலாடுதுறை புறவழிச் சாலை திட்டத்திற்கு நில எடுப்பு பணி முடிவுற்ற நிலையில், மேற்படி புறவழிச் சாலை திட்டத்தில் முதற்கட்டமாக, ஆணைமேலகரம் உளுத்தகுப்பை மற்றும் உளுத்தகுப்பை மன்னமந்தல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை செயல்படுத்த நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நிவேதா எம். முருகன் பேசினார்.

---



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை எஸ்.ஏ. இராஜமாணிக்கம்

ஜுலை 3 (1998)

சுயமரியாதை இயக்க ஆரம்பகால தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி நகரச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று கோவை மாவட்டத்தில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர்.

கோவை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் தங்கியிருந்தபோது, அன்றாடம் கலைஞர் அவர்களை சந்தித்து உரையாடக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

நகர்மன்ற உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## திருவள்ளூர்

## ஜனார்த்தன் மறைவு!

திருவள்ளூர், ஜுலை 3-
திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் தொழுவூர் ஊராட்சி லட்சுமி நகர் திமுக கிளைச் செயலாளர் ஜெனா(எ) ஜனார்த்தன் சிறுக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் 01-07-2024 இரவு 8.20 மணியளவில் விபத்தில் சிக்கி பலியானார். அன்னாரின் உடல் தொழுவூர்குப்பம் லட்சுமி நகர் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (02-07-2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி அளவில் நடைபெற்றது. திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் தி.மு.க. சார்பில் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

---



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி சார்பில் விக்கிரவாண்டி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பாகம் 180 இல் அடங்கிய ஐயூர் அகரம் சிந்தாமணி திரௌபதி அம்மன் கோயில் தெரு கிழக்கு பிள்ளையார் கோயில் தெரு, ஆகிய பகுதிகளில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் வீடு வீடாகச் சென்று வாக்குகளை சேகரித்தார் அதுபோது அ.தி.மு.க.வைச் சார்ந்த கண்ணன், பார்த்திபன், சேகர், இருசப்பன், மணிமாறன், மணி மற்றும் பத்துக்கும் மேற்பட்டவர்கள் கழகத்தில் இணைந்தனர். மேலும் வாலிபால் விளையாட்டு வீரர்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார் மற்றும் 100 நாள் வேலை குறித்தும் பேருந்து வசதி சாலை வசதி குறித்தும் அமைச்சரிடம் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இந்த குறைகளை தீர்த்து வைப்பேன் என உறுதி அளித்து அமைச்சர் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்குகளை சேகரித்தார். இதில் ஒன்றிய செயலாளர் ரவிதுரை, ஒன்றிய தலைவர் சங்கீதா அரசி, ராஜ்கான், கே.அண்ணாதுரை, ஜே.வரதன், கரிகாலன், இளவரசன், பிரகாஷ் ,மாதவரம் 30 (அ) வட்ட செயலாளர் டி. சுந்தரம் 32 வட்ட செயலாளர் எம் . சரவணன் மற்றும் சி ஹரிஷ் ஏ.வி. முருகன், சி எல் உதயா வேலு மற்றும் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

---

## பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி

# வாலிகண்டபுரம் நியாய விலைக்கடை இரண்டாகப் பிரிக்கப்படுமா?

## பேரவையில் பெரம்பலூர் ம. பிரபாகரன் கேள்வி!



சென்னை, ஜுலை 3-
சட்டப்பேரவையில் பெரம்பலூர் தொகுதி உறுப்பினர் ம. பிரபாகரன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அளித்த பதிலும் வருமாறு:-

**ம.பிரபாகரன்:** பெரம்பலூர் தொகுதி, வாலிகண்டபுரம் நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்:** தேவையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் வாலிகண்டபுரம் முழுநேர நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து, புதிய முழு நேர நியாய விலைக் கடை ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ம.பிரபாகரன்:** அமைச்சர் அவர்கள், சாத்தியக்கூறுகள் இல்லை என்று கூறியிருக்கிறார். எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேப்பந்தட்டை வட்டம், வாலிகண்டபுரம் ஊராட்சியில் வாலிகண்டபுரம் 1 மற்றும் வாலிகண்டபுரம் 2 என இரண்டு நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. வாலிகண்டபுரம் ஊராட்சி என்பது சுமார் 6,000 மக்கள் தொகையை கொண்டது. வாலிகண்டபுரம் 1 நியாய விலைக் கடையில் சுமார் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளன. அக்கடை ஊருக்கு எல்லைப்புறமான மாரியம்மன் கோயிலுக்கு அருகில் உள்ளது. தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் வசிக்கும் மக்கள், கிழக்குத் தெருக்களில் வசிக்கும் மக்கள் என சுமார் 250 குடும்பங்களுக்கு மேல் அங்கு வசிக்கிறார்கள். அந்த இடங்களிலிருந்து நியாய விலைக் கடைக்குச் செல்ல மக்கள் வெகு தொலைவிற்கு, சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவிற்குச் செல்ல வேண்டியிருப்பதால், வாலிகண்ட புரம் 1 நியாய விலைக் கடையிலிருந்து இந்த 250 குடும்ப அட்டைகளைப் பிரித்து, ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** பெரம்பலூர் மாவட்டம், தேவையூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ், வாலிகண்டபுரம் நியாய விலைக் கடை எண் 1, 948 குடும்ப அட்டைகளுடனும், வாலிகண்டபுரம் 2 நியாய விலைக் கடை 717 குடும்ப அட்டைகளுடனும், இரண்டு முழு நேர நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே அங்கு செயல்பட்டு வருகின்றன. கிராமப் பகுதிகளில் ஒரு முழுநேர நியாய விலைக் கடையைப் பிரித்து ஒரு புதிய முழு நேர நியாய விலைக் கடை அமைக்கப்படும்போது, தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும், புதிததாக உருவாக்கப்படவிருக்கின்ற முழு நேர நியாய விலைக் கடையிலும் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். ஆக, மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், வாலிகண்டபுரத்தில் மூன்றாவதாக ஒரு முழு நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்ற பதிலைத்தான் சொன்னேன். ஆனால், உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை பொது மக்களுடைய சௌகரியத்திற்காக அக்கறை எடுத்து வைத்திருக்கின்றார். ஆகவே, அந்தப் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடையை அமைப்பதில் எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஆகவே, உடனடியாக அதை விரைந்து அமைத்துத் தரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ம.பிரபாகரன்:** பொது மக்களின் அக்கறையைக் கருத்தில் கொண்டு, பகுதி நேரக் கடை அமைப்பதற்கு உறுதி அளித்திருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி. களத்தூர் பகுதியில் உள்ள நியாய விலைக் கடை உள்ளது. சுமார் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள அந்தக் கடையை இரண்டு முழு நேர கடையாகப் பிரிக்கவும், அதுபோல், அயன்பாரியூர் சமத்துவபுரம் என்ற பகுதியிலிருந்து மக்கள் பொருட்கள் வாங்க அயன்பாரியூரிலிருந்து கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதால், சமத்துவபுரத்திலேயே பகுதி நேரக் கடைக்கு இடமும் இருக்கிறது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்து அந்த சமத்துவபுரத்தில் மக்கள் அலை கழிக்கப்படாமல் இருக்க, அங்கேயும் ஒரு பகுதி நேரக் கடை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்:** மக்களுடைய நலன் கருதி வைத்த கோரிக்கைகளை நம்முடைய அலுவலர்களிடத்தில் முறையாக அதனை கொடுத்தால், உடனடியாக ஆய்வு செய்து, தேவைகளுக்கேற்ப ஏனென்றால் புதிய கடைகளை முழு நேரக் கடைகளாகவோ, பகுதி நேரக் கடைகளாகவோ பிரித்துத் தருவதில் எந்தவிதமான தயக்கமும் இல்லை. இந்த 3 ஆண்டு கால ஆட்சியிலேகூட, 997 பகுதி நேரக் கடைகள் புதிதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, முழு நேரக் கடைகள் என்று பார்த்தோம் என்றால், 511 கடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நிபந்தனைகளுக்குட்பட்டிருந்தால் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் மாறுபட்ட கருத்து அல்ல. பரிசீலித்து செய்து தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---



கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 32 வது வார்டு முத்துராஜபுரத்தில் இருந்து அ.தி.மு.க. மற்றும் தே.மு.தி.க. கட்சியிலிருந்து சுமார் 20க்கும் மேற்பட்டோர் கலைஞர் அறிவாலயத்தில் தளபதி அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அ.தி.மு.க. முன்னாள் வார்டு பிரதிநிதி ராமச்சந்திரன் தலைமையில் பூத் கமிட்டி நிர்வாகி பாலசுப்பிரமணி, தே.மு.தி.க. நகர நெசவாளர் அணி செயலாளர் கோவிந்தராஜ் உள்ளிட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி, மாநகர தி.மு.க. செயலாளர் எஸ்.பி.கனகராஜ் கழக துண்டு அணிவித்து வரவேற்றார்.மாவட்ட துணை செயலாளர் மகேஸ்வரி சுப்பிரமணி, மண்டலக் குழுத் தலைவர் ஆர்.எஸ்.ராஜா, மத்திய மாநகர செயலாளர் வி.ஜி.எஸ் குமார், மாமன்ற உறுப்பினர் நிவேதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.